**முதன்மை மாவட்ட நீதிமன்றம், அரியலூர்**

முன்னிலை : திருமதி. தி. மலர்வாலன்டிணா., எம். எல்.,

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,

அரியலூர்.,

**2026 –ம் ஆண்டு ஜூன் திங்கள் 6–ம் நாள் சனிக்கிழமை**

2057 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் வைகாசி திங்கள் 23–ம் நாள்

**TROP. No.13/2026**

**CNR .No.TNAL010006942026**

1. சித்ரா – மனுதாரர்கள்
2. சுபாஷ் சந்திரபோஸ்

–எதிர்–

செல்வராஜ் –எதிர்மனுதாரர்

இம்மனு என் முன்பாக 02.06.2026 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு வாதங்களைக் கேட்டும், இதுநாள் வரையில் பரீசீலணையில் இருந்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

உத்தரவு

இம்மனுவானது அரியலூர் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள EP 121/2025 அசல் மனுவை ஜெயங்கொண்டம் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்து உத்தரவிடக் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**௨. மனுவின் சுருக்கம்**

இந்த மனுதாரர்களுக்கு எதிராக எதிர்மனுதாரர் அரியலூர் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு 216/2020 என்ற எண்ணில் வழக்கு தொடர்ந்து மேற்படி வழக்கானது கடந்த 08.07.2025 தேதியில் இந்த மனுதாரர்களுக்கு

எதிரான தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. இதனை நிறைவேற்ற இந்த எதிர்மனுதாரர் அரியலூர் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் இ.பி. 121/2025 என்ற எண்ணில் நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளார். இந்த நிறைவேற்று மனுவில் எதிர்மனுதாரர்களான இந்த மனுதாரர்களுக்கு நீதிமன்றம் எந்த ஒரு வழக்கு அறிவிப்பும் கொடுக்காமலேயே தாவா சொத்தை சுவாதீனம் எடுக்க உத்தரவிட்டு இருந்த நிலையில் சுவாதீனம் எடுக்க 06.02.2026 அமீனா வந்தபோது தான் நிறைவேற்று மனு தாக்கல் செய்திருந்த விபரம் மனுதாரர்களுக்கு தெரியவந்ததாகவும் மனுதாரர் தங்கள் வழக்கறிஞர் மூலம் கடந்த 09.02.2026 தேதி அசல் நிறைவேற்று மனுவில் எதிர்மனுதாரர்களான தங்களுக்கு எந்த வழக்கறிவிப்பும் கொடுக்காமலேயே சுவாதீனம் எடுக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக மெமோ தாக்கல் செய்துள்ளனர். சட்டப்படி தங்களுக்கு வழக்கறிவிப்பு கிடைக்கவில்லை என்ற அடிப்படை உரிமையை கேட்ட இந்த மனுதாரர்களான அசல் நிறைவேற்று மனுவின் எதிர்மனுதாரர்களை மிரட்டும் வகையில் அரியலூர் கூடுதல் சார்பு நீதிமன்ற நீதிபதி இந்த மனுதாரர்களின் வழக்கறிஞர் வழக்கறிஞரா என்பதே சந்தேகமாக உள்ளதாகவும் அதனால் அவருடைய படிப்புச் சான்றிதழ் வழக்கறிஞர் பதிவுச் சான்றிதழையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தவிட்டு இருந்தது, இந்த உத்தரவுப்படி கடந்த 17.02.2026 அன்று வழக்கறிஞரும் அவருடைய சான்றிதழையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

மனுதாரர் தங்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் அறிவிப்பை தெரிந்து கொள்ளும் உரிமையை பற்றி எழுப்பியதற்காக அவருடைய வழக்கறிஞரை மிரட்டும் வகையில் அவருடைய சான்றிதழை ஒப்படைக்க உத்தரவிட்டுள்ளார். வழக்கறிஞர் சான்றிதழ் குறித்து கேள்வி எழுப்ப சட்டப்படி எந்த அதிகாரமும் இல்லாத அரியலூர் கூடுதல் சார்பு நீதிபதி அதிகார

துஷ்பிரயோகம் செய்து வழக்கறிஞரின் சான்றிதழை ஒப்படைக்க உத்தரவிட்டுள்ளார். இவ்வாறு மனுதாரரின் உரிமையை கேட்டால் அவர்களுக்கு எதிராக சட்டப்படி அதிகாரம் இல்லாத எந்த ஒரு உத்தரவையும் இந்த மனுதாரர்கள் அசல் நிறைவேற்று மனுவில் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்க தயங்கமாட்டார் என்ற அச்சம் இந்த மனுதாரர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

மேற்படி காரணங்களால் அரியலூர் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள இ.பி 121/2025 வழக்கினை அதே நீதிமன்றத்தில் மேற்கொண்டு நடத்தினால் இந்த மனுதாரர்களுக்கு சட்டப்படி எந்த நியாயமும் கிடைக்காது என்பதால் இந்த அசல் நிறைவேற்று மனுவை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளனர். எனவே அரியலூர் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் விசாரணை நிலுவையில் உள்ள இ.பி 121/2025 அசல் மனுவை ஜெயங்கொண்டம் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றுதல் செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை எதுவும் தாக்கல் செய்யவில்லை.

4. தற்போது தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா இல்லையா என்பதேயாகும்?

<u>5. பிரச்சனைக்கான தீர்வு</u>

மனுதாரர்கள் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. இந்த மனுதாரர்களுக்கு எதிராக எதிர்மனுதாரர் அரியலூர் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு 216/2020 என்ற எண்ணில் வழக்கு தொடர்ந்து மேற்படி வழக்கானது கடந்த 08.07.2025 தேதியில் இந்த மனுதாரர்களுக்கு எதிரான தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு மேற்படி தீர்ப்பாணையை நிறைவேற்ற இம்மனுவின் எதிர்மனுதாரர் அரியலூர் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் இ.பி. 121/2025 என்ற எண்ணில் நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளார். இந்த நிறைவேற்று மனுவில் எதிர்மனுதாரர்களான இந்த

மனுதாரர்களுக்கு நீதிமன்றம் எந்த ஒரு வழக்கு அறிவிப்பும் கொடுக்காமலேயே தாவா சொத்தை சுவாதீனம் எடுக்க உத்தரவிட்டு இருந்த நிலையில் சுவாதீனம் எடுக்க 06.02.2020 அமீனா வந்தபோது தான் நிறைவேற்று மனு தாக்கல் செய்திருந்த விபரம் மனுதாரருக்கு தெரியவந்ததாகவும் மனுதாரர்கள் தங்கள் வழக்கறிஞர் மூலம் கடந்த 09.02.2026 தேதி அசல் நிறைவேற்று மனுவில் எதிர்மனுதாரர்களான தங்களுக்கு எந்த வழக்கறிவிப்பும் கொடுக்காமலேயே சுவாதீனம் எடுக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக மெமோ தாக்கல் செய்துள்ளனர். சட்டப்படி தங்களுக்கு வழக்கறிவிப்பு கிடைக்கவில்லை என்ற அடிப்படை உரிமையை கேட்ட இந்த மனுதாரர்களை மிரட்டும் வகையில் அரியலூர் கூடுதல் சார்பு நீதிமன்ற நீதிபதி இந்த மனுதாரர்களின் வழக்கறிஞர் வழக்கறிஞரா என்பதே சந்தேகமாக உள்ளதாகவும் அதனால் அவருடைய படிப்புச் சான்றிதழ் வழக்கறிஞர் பதிவுச் சான்றிதழையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தவிட்டு இருந்த நிலையில் அந்த உத்தரவுப்படி கடந்த 17.02.2026 அன்று வழக்கறிஞரும் அவருடைய சான்றிதழையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தங்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் அறிவிப்பை தெரிந்து கொள்ளும் உரிமையை பற்றி விபரம் கோரியதற்கு அவருடைய வழக்கறிஞரை மிரட்டும் வகையில் அவருடைய சான்றிதழை ஒப்படைக்க உத்தரவிட்டுள்ளதாகவும், எனவே அரியலூர் கூடுதல் சார்பு நீதிபதி அவர்கள் மனுதாரர்களுக்கு எதிராக எந்த ஒரு உத்தரவையும் பிறப்பிக்க தயங்கமாட்டார்கள் என்ற அச்சம் இந்த மனுதாரர்களுக்கு ஏற்பட்டுள்ளதாகவும், எனவே மேற்படி வழக்கை அரியலூர் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நடத்தினால் மனுதாரருக்கு நியாயமான மற்றும் சட்டப்படியான தீர்ப்புக் கிடைக்காது என்று கருதி மனுதாரர் மேற்படி EP 121/2025 அசல் மனுவை ஜெயங்கொண்டம் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்து உத்தரவிடக்கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக வாதிட்டுள்ளார்.

6. மேலும் மனுதாரர் வழக்கை மாற்றுவதற்கு குறிப்பிட்டுள்ள காரணங்களில் அரியலூர் கூடுதல் சார்பு நீதிபதி அவர்கள் இம்மனுவின் மனுதாரரருக்கு எதிராக செயல்படுவதாக கூறியுள்ளதைப் பொறுத்த மேற்படி அரியலூர் கூடுதல் சார்பு நீதிபதி அவர்களிடம் விளக்கம் கோரப்பட்டது. அரியலூர் கூடுதல் சார்புநீதிபதி அவர்கள் தங்களது விளக்கத்தில் மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள காரணத்தை மறுத்துள்ளார். மனுதாரர் இந்நிறைவேற்று மனுவை ஜெயங்கொண்டம் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்து உத்தரவிடக்கோரியுள்ளார். நிறைவேற்று மனுவை 6 மாத காலத்திற்குள் முடிக்க வேண்டும் என்பது உச்ச நீதிமன்றத்தின் வழகாட்டுதலும், உத்தரவும் ஆகும். நிறைவேற்று மனுவை காலதாமதப்படுத்துவதற்காக தான் இந்த மனுவை தாக்கல் செய்யவில்லை என்ற வாதம் மனுதாரர் தரப்பில் முன்வைக்கப்பட்டாலும் அரியலூரிலேயே முதன்மை சார்பு நீதிமன்றம் இயங்கி வருகின்ற நிலையில் ஜெயங்கொண்டம் சார்பு நீதிமன்றத்திற்கு இந்த மனுவை மாற்றுவதற்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் கூடுதல் சார்பு நீதிமன்ற நீதிபதியைப் பற்றி மனுவில் கூறியுள்ள மனுதாரரின் கருத்துக்களை இந்நீதிமன்றம் முழுவதுமாக ஏற்கவும் இல்லை, ஆனாலும் பின்னிட்டு மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தியை தவிர்க்கும் பொருட்டும், இந்நிறைவேற்று மனுவை உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல்படி விரைவாக முடிக்க வேண்டியும் நிறைவேற்று மனுவை அரியலூர் முதன்மை சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றுவது ஏற்புடையது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே EP No.121/2025 என்ற நிறைவேற்று மனுவை அரியலூர் முதன்மை சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்து இம்மனு முடிக்கப்படுகிறது.

முடிவாக இம்மனு அனுமதித்து, அரியலூர் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நடைபெறும் EP No.121/2025 என்ற வழக்கை அரியலூர் முதன்மை சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2026–ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 6–ம் நாள் என்னால் உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

MALARVALANTINA THILLAIVANAM

Digitally signed by MALARVALANTINA THILLAIVANAM
Date: 2026.06.10 18:25:24 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
அரியலூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் – இல்லை</u>
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் – இல்லை</u>

MALARVALANTINA THILLAIVANAM

Digitally signed by MALARVALANTINA THILLAIVANAM
Date: 2026.06.10 18:25:30 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
அரியலூர்.

**நகல்**

1. முதன்மை சார்பு நீதிபதி அவர்கள், சார்பு நீதிமன்றம், அரியலூர்

2. கூடுதல் சார்பு நீதிபதி அவர்கள், கூடுதல் சார்பு நீதிமன்றம், அரியலூர்